பதிவு எண் : M. 6311. ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம். ஏ. எம். பி.

மலர் : 16] சென்னை : ஆவணி 15 (30—8—68) வெள்ளி ★ வெளியூர் : ஆவணி 16 (31—8—68) சனி [இதழ் : 65

தமிழக அரசின் ரூ. 9,000 மானியம்

சென்னை, ஆக. 30—

"இரு நாட்டிய நாடகங்கள், அரிய இசைப் பாடல்கள், உட்பட தியாகராசரின் இசைப் பாடல்களை வெளியிடுவதற்குத் தமிழக அரசு இதுவரையில், மாநில இசை -- நாடக சங்கத்திற்கு ரூ. 9,000 மானியம் அளித்திருக்கிறது"

என்று சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

டில்லியின் நம்பிக்கைத் துரோகம்

ஏற்றுக்கொண்ட பலதொழில் திட்டங்கட்கும் கைவிரிப்பு!

தமிழகத்தில் ஏற்படவிருந்த மண் வாரி இயந்திரத் தொழிற்சாலைக்கு அனுமதி மறுப்பு

முதலமைச்சர் அறிஞர் அண்ணா வெளியிடும் வேதனைச் செய்தி

சென்னை, ஆக. 29—

"தமிழகத்தில் பல கைத்தொழில் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துவிட்டு, பின்னர் மத்திய அரசு அவற்றை நிறைவேற்றத் தவறிவிட்டது.

"அமெரிக்க ஜெனரல் மோட்டார் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் திருவள்ளூரில் மண்வாரி இயந்திரத் தொழிற்சாலை ஒன்றைத் துவங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; இதுபற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இங்குள்ள பிரதிநிதிகள் அமெரிக்கா செல்ல விரும்பினர்; ஆனல், இத்தகைய தொழிற்சாலையை அரசுத் துறையில் ஏற்படுத்த விரும்புவதாக இந்திய அரசு சொல்லிவிட்டது. ஏற்கனவே ஒப்புக்கொண்டிருந்த இந்தத் திட்டம் பற்றி இப்படிச் செய்துவிட்டது.

"இத்திட்டத்திற்கு சுமார் ரூ. 30 கோடிவரை முதலீடு செய்யப்பட்டிருக்கும்; பலருக்கு வேலை வாய்ப்புக்களும் கிடைத்திருக்கும்; இதற்குத் தேவையான நிலத்தைத் தருவதற்குத் தமிழக அரசு தயாராக இருந்தது; பல விவரங்கள் அநேகமாக இறுதியாக்கப்பட்டும்விட்டன"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், தென்னிந்திய வர்த்தகச் சங்கங்கள் ஆண்டு விழாக் கூட்டத்தில் உரையாற்றுகையில் வேதனையுடன் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

வேறு மாநிலங்களிலுள்ள சில தொழில் அதிபர்கள், தமிழ்நாட்டில் தொழில் நடத்த அனுமதி கேட்டுக்கொண்டுதான் இருக்கிருர்கள்; ஆனல், டெல்லி அரசுதான், 'பச்சைக் கொடி' காட்ட மறுக்கிறது.

டெல்லியிடம் இன்னும் 'தூங்கி'க் கொண்டிருக்கிறது!

சேலம் இரும்பு ஆலைக்காகவும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டத்துக்காகவும் தி. மு. கழகம், 'எழுச்சி நாள்' கொண்டாடியது; இப்போது தூத்துக்குடித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருவதால், நமக்குப் பாதி வெற்றி கிடைத்துவிட்டது!

ஆனல், சேலம் இருப்பு ஆலைத் திட்டம், இன்னும் டெல்லியிடம் தூங்கிக்கொண்டிருக்கிறது!"

தொழில் மந்தம்-- முயன்ருல் முடியாதா?

தென்னிந்திய வர்த்தக சங்கத்தின் 58-வது ஆண்டு பொதுக் குழுக் கூட்டத்தைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் மேலும் குறிப்பிட்டதாவது :—

"நாட்டில் தொழில் மந்தம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்தத் தொழில் மந்தம் தமிழ்நாட்டில் மட்டுமல்ல; இந்தியா முழுவதிலும் இருக்கிறது.

"தொழில் அதிபர்கள் — நிபுணர்கள், பொதுமக்கள்— அரசு ஆகிய அனைவரும் கூட்டுமுயற்சி செய்தால்தான், 'தொழில் மந்தம்' என்ற நிலையைத் தாண்ட இயலும்.

தொழில் மந்தம் நீங்குவதற்குத் தமிழக அரசு, தன்னுல் இயன்ற முயற்சிகள் அனைத்தையும் செய்துவருகிறது.

விவசாயத்திற்கே முதலிடம் அவசியம்

மின்சாரக் சட்டணத்தில் விவசாயிகளுக்குச் சலுகை வழங்குவது போல், தொழிற்சாலைகளுக்கும் சலுகை வழங்க வேண்டுமெனக் கோரப்படுகிறது. நம் மாநிலத்தில், விவசாயம் முதலிடம் வகிக்கிறது; விவசாயம் அமைதியாக நடந்தால்தான், மற்றத் தொழில்கள் ஒழுங்காக நடைபெற முடியும். எனவேதான், தமிழக அரசு, விவசாயத்திற்கு முதலிடம் தருகிறது.

விவசாயத் துறையில் நாம் அதிகக் கவனம் செலுத்தியதால் தான், உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்று நம் மாநிலம், மிகுதியாக உணவு உற்பத்தியாகும் மாநிலமாகத் திகழ்கிறது!

தமிழகத்தில் மட்டுமல்ல-- உலகம் முழுவதிலுமே!

தமிழகத்தில் தொழில் மந்தத்துக்கு வேலைநிறுத்தங்களும், தொழிலாளர் நடவடிக்கைகளும் காரணம் எனக் கூறப்படுகிறது; இது தவறு; இந்த நிலை, தமிழகத்தில் மட்டுமல்ல -- உலகம் முழுவதிலும் இருக்கிறது;

தவருன வாதம் அது!

"தொழில் அமைதியின்மையால் மற்ற மாநிலத்தவர் இங்கு முன்போல் தொழில் செய்ய வருவதில்லை" என்பது தவருன வாதமாகும்.

வறட்சி நிலை நீங்கிடத் தமிழக அரசின் திட்டம்

மத்திய அரசு உதவியளிக்குமா?

நாடாளுமன்றத்தில் தா. கிருட்டினன் கோரிக்கை

புதுடில்லி, ஆக. 29—

"வறட்சியான பகுதிகளில் மக்களின் குறைகளை நீக்கிட ஏற்கனவே தமிழக அரசு, 'மாதிரித் திட்டம்' ஒன்று தயாரித்து நிவாரண வேலைகளை மேற்கொண்டிருக்கிறது.

"நீரூற்றுக் கிணறுகள் மூலமும், சிறிய நீர்த் தேக்கங்கள் மூலமும் தமிழக அரசு, வறட்சி நிலையைப் போக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகிறது; தமிழக அரசின் 'மாதிரித் திட்ட'த்தை நிறைவேற்ற மத்திய அரசு உரிய முறையில் உதவியளித்திட முன்வரவேண்டும்"

என்று மக்களவையில், கழக உறுப்பினர் தா. கிருட்டினன் வற்புறுத்தினர்.

"ஆந்திரம், மைசூரிலுள்ள ஒரு சில பகுதிகள் -- தமிழ்நாட்டில் சில பகுதிகள் வறட்சியால் பாதிக் ப்பட்டுள்ளன; இப்பகுதியில் வாழும் மக்களின் அல்லலைப் போக்கிட அரசு ஆவன செய்ய வேண்டும்"

என்ற தனி நபர் மசோதாமீது நடைபெற்ற விவாதத்தின்மீது பேசுகையிலேயே கழக உறுப்பினர் த. கிருட்டினன் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

விவாதத்தின்மீது பேசிய பல்வேறு உறுப்பினர்களும், 'இப்பிரச்சினையைத் தேசிய பிரச்சினையாகக் கொள்ள வேண்டும்" என வலியுறுத்தினர்.

மருத்துவ மாணவர் தேர்வில் அரசு கையாண்ட முறை

எல்லாத் தரப்பினருக்கும் வாய்ப்பளிப்பதே நோக்கம்

சட்டமன்றத்தில் அமைச்சர்கள் விளக்கம்

சென்னை, ஆக. 30—

மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து, இன்று சட்டமன்றத்தில் திரு. வி. கே. கோதண்டராமன் கேட்ட கேள்வியையொட்டி, எழுந்த பல்வேறு துணைக் கேள்விகட்கும் அமைச்சர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, செ. மாதவன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பதிலளிக்கையில், அரசின் நிலையை விளக்கினர்.

எஸ். ஜே. சாதிக் பாட்சா

சுகாதார அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா பதிலளிக்கையில் கூறியதாவது :—

"1962 முதல் 1966 வரை மருத்துவக் கல்லூரிக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில், மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களையும், நேர்முகப் பேட்டியில் பெற்ற மதிப்பெண்களையும் அடிப்படையாக வைத்து ஒரு குழுவின்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்ற ஆண்டும் இந்த ஆண்டும் ஓய்வுபெற்ற உயர்நீதி மன்ற நீதிபதியைத் தேர்வுக் குழுத் தலைவராக நியமித்தோம்.

தாழ்த்தப்பட்ட -- பின் தங்கிய வகுப்பினருக்கென்று ஒரு குறிப்பிட்ட அளவு இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது."

செ. மாதவன்

சட்ட அமைச்சர் திரு செ. மாதவன் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"நேர்முகப் பேட்டியில் பெற்ற மதிப்பெண்களின் பட்டியலைத் தாங்களே வைத்துக்கொள்ள வேண்டும் என்றும், அரசிடம் கொடுக்க இயலாது என்றும் தேர்வுக் குழு உறுப்பினர்கள் கூறியிருக்கிருர்கள்.

"இந்த மதிப்பெண் பட்டியலை அவர்களே வைத்துக் கொள்ளலாமா என்பது பற்றி உயர் நீதிமன்றத்தின் கருத்து கேட்கப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்புக் கிடைத்த பின் அதன்படி ஆவன செய்யப்படும்.

நேர்முகப் பேட்டியில் பெற்ற மதிப்பெண்களின் பட்டியலை அழித்து விடுவது என்பது, முன்பிருந்த அரசினர் கடைபிடித்த முறைதான். அதைப் பின்பற்றித்தான் நாமும் சென்ற ஆண்டு நடந்து கொண்டோம். நாம்தான், 'அதனை அழிக்காமல் ஒரு குறிப்பிட்ட காலத்துக்காவது வைத்திருக்க வேண்டும்' என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

"எரிப்பது என்பது பரம்பரையாக நடப்பதுதான் இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர்தான் அதைப்பற்றி இப்படிப்பட்ட கேள்விகளெல்லாம் எழுப்பப்படுகிறது.

"மதிப்பெண் பட்டியலை வெளியிட்டால் அதனல் குழு உறுப்பினர்களைப் பாதிக்கக்கூடிய சங்கடங்கள் ஏற்படக்கூடும் என்று குழு உறுப்பினர்கள் கூறுகிருர்கள். உதாரணமாக, ஒரு மாணவரின் மதிப்பெண் குறைவாக இருந்து அது

(4-ம் பக்கம் பார்க்க)

'அரசியல் கட்சிப் பத்திரிகைகளைச் சொந்தச் செலவில் சிறைக் கைதிகள் வாங்கிப் படிக்கலாம்'

'சில செய்திகளைத் தார் பூசி மறைக்கும் முறை நிறுத்தப்படும்'

'சட்டமன்ற --- நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிறையைப் பார்வையிடலாம்'---சட்டத் துறை அமைச்சர் மாதவன் விளக்கம்

சென்னை, ஆக. 29—

"சிறைச்சாலைகளில் எந்த ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்த பத்திரிகையையும் அரசாங்கச் செலவில் வழங்குவதில்லை என்று அரசு முடிவெடுத்திருக்கிறது. அப்படி எந்த அரசியல் கட்சிப் பத்திரிகையாவது தேவை என்றால், அவரவர் சொந்தச் செலவில் தருவித்துப் படிப்பதை அரசு தடை செய்யாது"

என்று சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் செ. மாதவன் தெரிவித்தார்.

"அரசு வகுத்துக்கொண்டுள்ள இந்தக் கொள்கையின் அடிப்படையிலேயே 'நவசக்தி' இதழைச் சிறைச்சாலையில் வழங்குவது நிறுத்தப்பட்டது; 'நவசக்தி'யோடு சேர்த்து, வேறு பல இதழ்களும் நிறுத்தப்பட்டிருக்கின்றன" என்றும் அவர் கூறினார்.

"தற்போது, 'தினமணி', 'சுதேசமித்திரன்', 'தமிழ்நாடு' ஆகிய மூன்று நாளிதழ்கள் மட்டுமே அரசின் செலவில் வழங்கப்படுகின்றன" என்றும் அவர் தெரிவித்தார்.

கே. விநயகம் :—"தி. மு. க. பத்திரிகைகளான 'நம் நாடு', 'முரசொலி', 'மாலைமணி' ஆகியவை போடப்படுகின்றனவா ?"

அமைச்சர் :—"நான் சொன்ன மூன்று இதழ்களைத் தவிர வேறு எந்த அரசியல் கட்சிப் பத்திரிகைகளும் போடப்படவில்லை."

வீராசாமி :—"எந்த அரசியல் கட்சிப் பத்திரிகைகளும் கூடாது என்று முடிவு செய்தது இந்த அரசா -- முன்பிருந்த அரசா ?"

அமைச்சர் :— "முன்பிருந்த அரசு, குறிப்பிட்ட அரசியல் கட்சியை வளர்ப்பதற்காகச் சில பத்திரிகைகளைப் போடச் செய்ததால், நாங்களும், 'எங்கள் கட்சிப் பத்திரிகைகளைப் போட வேண்டும்' என்று கேட்டோம்; நாங்கள் ஆட்சிக்கு வந்ததும், 'எந்த அரசியல் கட்சிப் பத்திரிகையும் வேண்டாம்' என்று முடிவு செய்துவிட்டோம்."

ந. தர்மலிங்கம் (தி. மு. க.) :—"தமிழ்நாட்டின் ஆளும் கட்சியும் பெரிய அரசியல் கட்சியுமாகிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் 'நம் நாடு' இதழ் வாங்கிப் போடப்படுமா ?"

அமைச்சர் :—"'நம் நாடு' இதழை மனமுவந்து வாங்கிப் படிக்கிறவர்கள் எண்ணற்றோர் இருக்கிறார்கள். தேவைப்படுபவர்கள் சொந்தச் செலவில் வாங்கிக் கொள்வார்கள் என்ற நம்பிக்கையுண்டு."

சுரேந்திரன் :—"சிறைகளில் கொடுக்கப்படும் பத்திரிகைகளில், சில செய்திகள், தார் பூசி மறைக்கப்படுவது உண்மையா ?"

அமைச்சர் :—"இந்த வேதனையை நானே அனுபவித்திருக்கிறேன். 'ஒழுக்கக்கேடான செய்திகளைக் கைதிகள் படிக்கத் தேவையில்லை' என்பதற்காகத்தான் அவ்விதம் செய்யப்பட வேண்டும் என்பது விதி. ஆனால், நாங்கள் சிறையில் இருந்தபோது, அரசியல் சம்பந்தப்பட்ட செய்திகளையும், எங்களைப் பற்றி வரும் செய்திகளையும்கூடத் தார் பூசி மறைத்துவிட்டுக் கொடுத்தார்கள். 'இந்த மாதிரி இனி செய்ய வேண்டாம்' என்று உடனே உத்தரவு போடப்படும்."

மார்ட்டின் :—"சிறையில் உள்ளவர்கள் தனிப்பட்ட முறையில் வானொலி வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுமா ?"

அமைச்சர் :— "தனிப்பட்டமுறையிலும் வானொலி வைத்துக் கொள்ளலாம் என்று முன்பிருந்த அரசு அனுமதித்திருந்தது; இந்த அரசு, 'அப்படி வேண்டாம்' என்று கூறிவிட்டது. சிறையில் பொதுவாக எல்லோருக்குமாக உள்ள வானொலி நிகழ்ச்சிகளை, எல்லாப் பகுதிக்கும் கேட்கும்வகையில் ஒலிபெருக்கிகளை நிறையப் பொருத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது."

கேள்வி :— "சிறையைப் பார்வையிட சட்டமன்ற உறுப்பினர்கள் அனுமதிக்கப்படுகிறார்களா ?"

பதில் :— "முன்பு, சட்டமன்ற உறுப்பினர்கள், சிறையைப் பார்வையிட முடியாத நிலை இருந்தது; நான் சட்டமன்ற உறுப்பினனாக இருந்தும் எனக்கு அந்த நிலை ஏற்பட்டது; இப்போது அதை மாற்றி, சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னறிவிப்புடன் சிறைச்சாலையைப் பார்வையிட அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்."

கேள்வி :— "வேலூரில் மட்டுமே பெண்கள் சிறை இருப்பதால், தமிழகத்தின் மத்தியப் பகுதியான திருச்சியில் பெண்களுக்கான சிறை ஏற்படுத்தப்படுமா ?"

அமைச்சர் :— "பொதுவாகச் சிறைச்சாலைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதே இந்த அரசின் நோக்கம்."

கேள்வி :—"சிறை ஆலோசனைக் குழுவில் யார் யார் நியமிக்கப்படுகிறார்கள் ?"

பதில் :—"மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரைக்கேற்ப நியமிக்கப்படுகிறார்கள்."

மக்கள் மீது பழி போடுவதா?

சென்னை, ஆக. 28—

விநயகம் :— "நீங்கள் எப்படி ஆட்சிக்கு வந்தீர்கள் -- நீங்கள் சொன்ன வார்த்தைகளையெல்லாம் நம்பி ஏமாந்த மக்களின் வாக்குகளைப் பெற்று வந்துவிட்டீர்கள் !"

அண்ணா :—"'மக்கள் புத்திசாலிகள் அல்லர் -- அவர்கள் ஒன்றும் தெரியாதவர்கள்' என்று பொருள்படும்படியாக விநயகம் அவர்கள் பேசவேண்டாம்."

விநயகம் :— "நான் அப்படிச் சொல்லவில்லை; தனிப்பட்ட முறையில் முதலமைச்சரைப் பாதிப்பதாக ஏதும் சொல்லவில்லை."

அண்ணா :— "என்னைப் பற்றி உறுப்பினர் என்ன சொல்கிறார் என்பதுபற்றி எனக்குக் கவலை இல்லை; அவரது பேச்சின் முற்பகுதி என்னைப் பற்றித் தெரிவித்த கருத்துக்கள், இப்போது அவர் சொல்லுகின்றவற்றை ஈடு செய்துவிடுகின்றன. (நீண்ட நெடுங்காலமாக அண்ணா அவர்களைத் தமக்குத் தெரியும் என்றும், தம்மைப் போன்றவர்கள் அரசியலில் நுழைவதற்கு அண்ணா போன்றவர்களது அறிவாற்றல் பயன்பட்டிருக்கிறது என்றும் துவக்கத்தில் விநயகம் தெரிவித்தார்.)

கருத்திருமன் :— "'மக்கள் ஒரு தேர்தலில் தவறு செய்யக் கூடும்; மறு தேர்தல் மூலம் தான் அதற்கான மாற்று தேட முடியும்' என்று ஆப்பிரகாம் லிங்கனே கூறியுள்ளார்."

அண்ணா :—"லிங்கன் மிகக் கவனத்தோடு ('May')--கூடும்' என்ற வார்த்தையைப் பயன்படுத்திச் சொல்லியிருக்கிறார். அப்படிக் கூறியதன் மூலம், 'தவறும் செய்யலாம்; செய்யாமலும் போகலாம்' என்று பொருள்படத்தான் சொல்லியிருக்கிறார். ஆனால் விநயகம் அவர்கள், மக்கள் தவறிழைத்துவிட்டதாகத் திட்டவட்டமாக இங்கே கூறினார்.,,

விநயகம் :—"நானும், 'சரியாகவோ தவறாகவோ மக்கள் உங்களைத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள்' என்றுதான் கூறினேன்."

—சட்டமன்றத்தில்

உலகத் தமிழ் மாநாட்டுக்கு அரசு செய்த செலவு

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் விளக்கம்

சென்னை, ஆக. 28—

"சென்னையில் நடந்த உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, இந்தியக் குடியரசுத் தலைவர் வருகையை முன்னிட்டு சனவரி 3-ஆம் நாள் நடந்த பொதுக் கூட்டத்துக்கு ரூ. 25,000-மும், பந்தல், வரவேற்பு முதலியவற்றிற்காக ரூ. 13,000-மும், சனவரி 14-ம் நாள் முதலமைச்சர் அளித்த விருந்து வகையில் ரூ. 13;333-ம் அரசு செலவிட்டது"

என்று சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பதிலளிக்கையில் கூறினார்.

"மேலும், மாநாட்டுப் பணியை முன்னிட்டு அரசு அதிகாரிகளை ஒப்படைத்த வகையில், அவர்களுக்கான ஊதிய வகையில் ரூ. 23,785 செலவாயிற்று" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ம. பொ. சிவஞானம் :—"உலகத் தமிழ் மாநாட்டையொட்டி வைக்கப்பட்ட சிலைகளின் நகல் படிவங்களை மாற்றி அசல் படிவங்களை வைப்பதில் தயக்கம் ஏன் ?"

அமைச்சர் :—"விரைவில் வெண்கலச் சிலைகளை வைக்குமாறு அவற்றைச் செய்ய ஒப்புக் கொண்டுள்ள சிற்பிகளிடம் வற்புறுத்தி வருகிறோம். அவர்கள், 'ஒரு பத்து நாளில் வைத்துவிடுகிறோம்' என்கிறார்கள். பிறகு மீண்டும் தவணை சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சிலைக்கு ஆகும் செலவில் பாதியைத் தான் (ரூ. 12,000) அவர்களுக்குக் 'கொடுத்திருக்கிறோம்; வெண்கலச் சிலை வைத்த பிறகு தான் முழுத் தொகையும் கொடுக்கப்படவிருக்கிறது. விரைவில் அசல் சிலைகள் வைக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம்."

மார்ட்டின் :—"பூம்புகார் நகர் அமைக்கப்பட்டிருந்த இடத்தில் நிரந்தரமாக பூம்புகார் அமைக்கப்படுமா ?"

அமைச்சர் :—"அசல் பூம்புகார் நகரமே இருக்கின்றபடியால், சென்னையில் வேறொரு பூம்புகார் தேவையில்லை. அப்படி இங்கு அமைப்பதாக இருந்தாலும், அந்த இடத்தில் அமைக்க இராணுவத்தினர் அனுமதிக்க மாட்டார்கள்."

பீர் முகம்மது :—"உலகத் தமிழ் மாநாட்டு மலரில், 'கிறித்துவரும் இசுலாமியரும் வளர்த்த தமிழ் இலக்கியம்' என்ற தலைப்பிலான கட்டுரை விடுபட்டுப் போய்விட்டதால் மறு பதிப்பில் சேர்க்க ஆவன செய்யப்படுமா ?"

அமைச்சர் :—"இன்னும் முதல் பதிப்பே விற்று முடியவில்லை; முதற் பதிப்புத் தீர்ந்துபோய் இரண்டாம் பதிப்பு அச்சிடுகிற நேரத்தில் இந்த யோசனையைப் பரிசீலிக்கலாம்."

கேள்வி :— "உலகத் தமிழ் மாநாட்டுக்காக வசூலித்த தொகைக்கான வரவு - செலவு விவரங்களை இந்த அவையில் வைக்கப்படுமா ?"

பதில் :—"உலகத் தமிழ் மாநாட்டுக்காக முழுக்க முழுக்க அரசே குழு அமைக்கவில்லை. அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் குழுக்கள் அமைக்கப்பட்டு வசூலிக்கப்பட்டது; அதுவும், வசூலித்த தொகை முழுதும் மாநாட்டுக்கு அல்ல; அந்தந்த மாவட்ட வளர்ச்சிக்காகவும் சேர்த்து வசூலிக்கப்பட்டது; அதற்கான கணக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இருக்கிறது; தனிக் கேள்வி கேட்டால் சேகரித்துத் தரப்படும்."

லாட்டரிச் சீட்டுக்கு டில்லி ஆதரவு

மாநில அரசுகளுக்கு திட்டக்குழு யோசனை

புதுடில்லி, ஆக. 28—

மாநில அரசு பரிசுச் சீட்டுக் குலுக்கும் திட்டத்துக்கு மத்திய அரசிலிருந்தும் ஆதரவு கிடைத்துள்ளது.

நாடாளுமன்ற மேலவையில் கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு நிதித்துறைத் துணையமைச்சர் திரு. கே. சி. பந்த் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு நிதி திரட்டும் வழிவகைகளை ஆராயுமாறு மாநில அரசுகளைத் திட்டக் குழு கேட்டுக்கொண்டிருக்கிறது.

"லாட்டரிச் சீட்டு நடத்தவும், கிராமப்புறங்களில் சேமிப்பை ஊக்கப்படுத்தவும், மக்களிடமிருந்து கடன் எழுப்பவும் யோசனைகள் கூறப்பட்டுள்ளன."

மாவட்டத் தலைநகர்தோறும் விளையாட்டரங்கு

தமிழக அரசின் திட்டம்--- அமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக. 29—

"ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு விளையாட்டு அரங்கம் (ஸ்டேடியம்) கட்டுவதென்ற திட்டத்தின்கீழ், திருச்சி—வேலூர் — நீலகிரி — மதுரை ஆகிய இடங்களில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; மதுரையில், இதற்குப் பொருத்தமான புறம்போக்கு நிலத்தைத் தேர்ந்தெடுக்கும் பணியில் மாவட்ட ஆட்சித் தலைவர் ஈடுபட்டிருக்கிறார்"

என்று கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"ஒவ்வொரு விளையாட்டு அரங்கிற்கும் செலவில் பாதி அல்லது ரூ. 1 இலட்சம் இதில் எது குறைவோ அதை அரசு கொடுக்கும்" என்றும் அவர் கூறினார்.

ஒவ்வொரு மாவட்டத்திலும், ரூ. 2 இலட்சம் — ரூ. 4 இலட்சம்—ரூ. 6 இலட்சம் என்ற அளவில் மதிப்பீடு செய்திருக்கிறார்கள் என்றும், அரசு கொடுக்கும் பணத்தோடு அந்தந்த நகராட்சி கொடுக்கும் பணமும், பொதுமக்களிடம் வசூலிக்கின்ற பணமும் சேர்ந்து இதற்குப் பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

தகவல்களைத் தெரிந்துகொள்வதற்கே கேள்வி நேரம்

மக்களவைத் தலைவர் அறிவுறுத்தல்

புதுடில்லி, ஆக. 28—

"அவையில் வந்திருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியாத நிலையிலுள்ளவர்கள் மீது மறைமுகமாக மாசு கற்பிக்கும் வகையில் உறுப்பினர்கள் பேசும் 'பழக்கம்' வருந்தத்தக்கதாகும்"

என்று மக்களவைத் தலைவர் சஞ்சீவ(ரெட்டி), மக்களவையில், துணைக் கேள்வி ஒன்று கேட்கப்பட்டபோது குறுக்கிட்டுக் கூறினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"தகவல் தெரிந்துகொள்வதற்காகத்தான் கேள்வி நேரம் இருக்கிறதே தவிர, மறைமுகமாக மாசு கற்பிப்பதற்காக அல்ல !

"கேள்வி நேரத்திலோ அல்லது விவாதங்களின்போதோ, மறைமுகமாக மாசு கற்பிக்கலாகாது; அவையில் இல்லாதவர்கள் மீது 'மண்ணை அள்ளிப் போடுவது' கண்ணியமன்று !"

உணர்ந்தபின் திருந்துகிறார்?

சென்னை, ஆக. 28—

கருத்திருமன் :—"நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாங்கள் கொண்டுவந்திருக்கிறோம்; அதன் முடிவைப் பற்றிக் கவலைப்படவில்லை; 'காரியத்தைச் செய்; பலனைப்பற்றி எதிர்பார்க்காதே' என்று 'பகவத் கீதை'யில் ஒரு உபநிஷத் இருக்கிறது."

அண்ணா :— "'பகவத் கீதையில் ஒரு சுலோகம்' என்று சொல்லுங்கள்; 'பகவத் கீதையில் ஒரு உபநிஷத்' என்று கூறுவது தவறு."

கருத்திருமன் :— "இதிலிருந்து, முதலமைச்சர், பகவத் கீதை-- உபநிஷத் ஆகியவை பற்றி உணர்ந்திருக்கிறார் என்று தெரிகிறது."

—சட்டமன்றத்தில் : (28—8—68)

சர்க்கரை விநியோகத்தில் டில்லியின் போக்கு

தமிழக அரசு எதிர்ப்பு

சென்னை, ஆக. 28—

"சர்க்கரைக் கட்டுப்பாட்டைக் கொண்டு வருவதும், நீக்குவதும் மத்திய அரசின் கையில் இருக்கிறது, இப்போதைய நிலையில் சர்க்கரை கட்டுப்பாட்டை நீக்குவது ஆபத்தாகிவிடும்"

என்று உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன், சட்டமன்றத்தில் கேள்வி நேரத்தின்போது கூறினார்.

இதையொட்டிய துணைக்கேள்விகளுக்கு அமைச்சர் அளித்த விளக்கம் வருமாறு :—

"இப்போதைய நிலையில் சர்க்கரைக் கட்டுப்பாட்டை நீக்கக் கூடாது என்பதே தமிழக அரசின் கொள்கை.

"சர்க்கரைக் கட்டுப்பாட்டை செயல்படுத்தும் அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்பதற்காகச் சர்க்கரைக் கட்டுப்பாட்டை நீக்கவேண்டிய அவசியமில்லை.

"சர்க்கரை உற்பத்தியில் நாற்பது சதவிகிதத்தை கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரையில் தனியார் விற்கலாம் என்று டில்லி அனுமதித்துள்ளது; இதைத் தமிழக அரசு எதிர்த்து இருக்கிறது

"தமிழகத்திற்கு ஆறுயிரம் டன் சர்க்கரை தான் கிடைக்கிறது; மத்திய அரசு அதிக சர்க்கரை ஒதுக்கித் தந்தால், தாராளமாக எல்லா இடங்களிலும் வழங்க முடியும்."

கூவம் ஆற்றில் படகு பவனி

ரூ. 2.78 கோடி செலவில் திட்டம்

டில்லி உதவியின்றியே நிறைவேற்றத் தமிழக அரசு முடிவு

சென்னை, ஆக. 28—

"சென்னை நகரில் சாக்கடைக் கழிவு நீரை அகற்றுவதற்காக ரூ. 278 இலட்சம் செலவில் திட்டம் ஒன்றைத் தமிழக அரசு வகுத்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் சென்னை நகர் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலத்திலும் தனித்தனியாகத் திட்டம் நிறைவேற்றப்படும்"

என்று பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி அவர்கள், சட்ட மன்றத்தில், கேள்விநேரத்தின்போது கூறினார்; மேலும் அவர் சில கேள்விகளுக்குப் பதிலளித்ததாவது:—

"முதல் கட்டமாக இத்திட்டம் வடசென்னையில் துவக்கப்படும்; இரண்டாவது—மூன்றாவது மண்டலங்களில் கழிவு நீர் அகற்றும் திட்டம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்படுத்தப்படும்.

"கூவம் ஆற்றைச் சுத்தமாகவும், ஆழமாகவும், போக்குவரத்துக்குப் பயனுள்ளதாகவும் ஆக்குவதற்கு ரூ. 118 இலட்சம் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. திட்டம் நிறைவேறியதும், கூவம் ஆற்றில் மின்விசைப் படகுகளும் விடப்படும். இதற்கான விரிவான திட்டம் பிறகு தயாரிக்கப்படவிருக்கிறது.

கேள்வி :— "சரக்குப் போக்குவரத்திற்கும் கூவம் ஆறு பயன்படுத்தப்படுமா? இதுவரையில் எந்த அளவிற்குத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது?"

அமைச்சர் :—"நேப்பியர் பாலம் அருகில் மண் தடுப்பு வேலை நடந்துவருகிறது. ஆற்றோரங்களில் மேடை அமைத்தல் போன்ற பூர்வாங்க வேலைகள் நடைபெறுகின்றன. 31—7—68 வரை பூர்வாங்க வேலைகளுக்கு ஒரு இலட்சத்து 58 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது."

கேள்வி:—"இத்திட்டத்தை நிறைவேற்ற மத்திய அரசின் நிதி உதவி கேட்கப்பட்டுள்ளதா?"

அமைச்சர் :—"முந்திய அரசு இந்தத் திட்டத்திற்காக உதவி கோரியது; மத்திய அரசு, நிதி அனுமதிக்க மறுத்துவிட்டது. எனவே மாநில அரசே இத்திட்டத்தை ஏற்று நடத்த முன்வந்துள்ளது."

விநாயகம் :—"நமது காலத்திலேயே கூவம் ஆற்றுத் திட்டம் நிறைவேறி நமது காலத்திலேயே காதலர்கள் மகிழ்ச்சியுடன் படகில் பவனிவரும் காட்சியைக் காண முடியுமா?"

அமைச்சர் :— "மாண்புமிகு உறுப்பினர் அவர்களேகூட இவ்வாறு பவனி வரலாம்."

அடையாறில் தொழிற்பேட்டை

நிறுவ அரசு திட்டம்

சென்னை, ஆக. 28—

"அடையாறில் ஒரு சாதாரண தொழிற்பேட்டையைத் துவங்குவதற்குத் தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது; இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உத்தேசமாக ரூ. 15.06 இலட்சம் செலவாகும்; மேற்கொண்டு ஆண்டிற்கு 1,847 இலட்சம் செலவாகும்"

என்று சட்டமன்றத்தில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

'மரபுகளுக்கு மதிப்பளிப்பது நல்லது'

உரிமைப் பிரச்சினைமீது தீர்ப்பு

சென்னை, ஆக. 29—

"நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னரே, அதன் விவரங்கள் -- வாசகங்கள் அனைத்தையும் பத்திரிகைகளில் வெளியிடுவது, மாபை மீறுவதாகும்; இனி உறுப்பினர்கள் இவ்வாறு நடந்துகொள்ளக்கூடாது"

என்று சட்டமன்ற துணை அவைத் தலைவர் புலவர் கோவிந்தன் அவர்கள், உரிமைப் பிரச்சினைமீது தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன்மீது கழக உறுப்பினர் திரு. அரங்கநாதன், உரிமைப் பிரச்சினை ஒன்றைக் கொண்டுவந்தார். இதன்மீது துணை அவைத் தலைவர் தீர்ப்பளிக்கையில் மேலும் கூறியதாவது:—

"தமிழக அரசின்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரத் தங்கள் கட்சி முடிவு செய்திருப்பதாகவும், அதற்கான காரணங்களையும் பத்திரிகைகளில் எதிர்க் கட்சித் தலைவர் பெயரிலேயே வெளியிடப்பட்டிருப்பதாகவும், இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் சட்டமன்றத்தில் எடுத்துக்கொள்வதற்கு முன்னதாகவே அதற்கான காரணங்களைப் பத்திரிகைகளில் வெளியிட்டதற்காக எதிர்க் கட்சித் தலைவர்மீது தி. மு. க. உறுப்பினர் திரு. அரங்கநாதன் உரிமைப் பிரச்சினை தாக்கல் செய்தார்.

"பத்திரிகைகளில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் சேர்ந்துள்ள அத்தனைக் காரணங்களும் வெளியிடப்பட்டிருக்கின்றன. தீர்மானத்தைச் சட்டமன்றத்தில் எடுத்துக்கொள்ளுவதற்கு எத்தனைப்பேர் ஆதரவு வேண்டும் என்ற விதிமுறைகளையும் அந்தப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளன.

"நம்பிக்கையில்லாத் தீர்மானம் அவையில் அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் விவரங்களை வெளியிடுவது சட்டமன்ற விதிகளுக்கு முரணானது என்பதை அந்தப் பத்திரிகைகள் தெரிந்திருக்க வேண்டும். அதையும் மீறி அந்தப் பத்திரிகைகளில் செய்தி வந்திருப்பது அவர்கள் தவறு அல்ல. எதிர்க் கட்சித் தலைவர் கூறியதாகவே அந்தப் பத்திரிகைகள் செய்தியை வெளியிட்டிருக்கின்றன.

"ஆகவே, இது அவையின் உரிமையைப் பாதிக்கிறதா என்பதைவிட, 'நல்ல முறைதானா?' என்பதைப் பார்க்கவேண்டும். இங்கு நல்ல மரபு பாதிக்கப்படுகிறது; இது மரபு மீறிய செயல் ஆகும்; ஆனாலும், பத்திரிகைகளுக்கு அந்த விவரங்களைத் தாம் கொடுக்கவில்லை என்றும், பத்திரிகைகளில் வந்ததைத் தாம் பார்க்கவில்லை என்றும், அந்தச் செய்திக்குத் தாம் பொறுப்பாளியல்ல என்றும் எதிர்க் கட்சித் தலைவர் கூறிவிட்டார். அவர் சொல்லுக்கு மதிப்பளித்து, இனிமேல் இந்த அவையின் மரபுகள் நல்ல முறையில் கடைபிடிக்கப்பட வேண்டும் என்று கூறி, இத்துடன் இப்பிரச்சினையை முடிக்கிறேன்."

மாணவர் விருப்பப்படியே பயிற்று மொழி

யார் மீதும் திணிக்கும் நடவடிக்கை இல்லை

அமைச்சர் விளக்கம்

சென்னை, ஆக. 28—

"தமிழ் பயிற்சி மொழித் திட்டம் எந்த மாணவர்கள் மீதும் கட்டாயமாகத் திணிக்கப்படவில்லை"

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

கே. விநாயகம் :—"மொழிச் சிக்கலில் தீர்வு காணும் பொறுப்பை அரசிடம் விட்டுவிடுமாறு மாணவர்களிடம் பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி கூறினாரா?"

அமைச்சர் :— "மொழிப் பிரச்சினையில் தீர்வு காணும் பொறுப்பை அரசிடமும், பெரியவர்களிடமும் விட்டுவிட வேண்டும் என்றும், மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்தட்டும் என்றும்தான் மாணவர்களிடம் அமைச்சர் கருணாநிதி கூறினார்."

மேலும் இது குறித்து கேட்கப்பட்ட துணைக் கேள்விகளுக்கு அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அளித்த விளக்கம் வருமாறு:—

"மாணவர்கள் கிளர்ச்சி செய்தபோது, 'தமிழ் பயிற்சி மொழியாக வேண்டும்' என்றுதான் கூறினார்கள். ஆங்கிலம் தான் பாட மொழியாக இருக்க வேண்டுமென்பது சரியல்ல.

"இப்போது, ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் கல்வி பயிலுவதற்கு வசதிகள் தரப்பட்டிருக்கின்றன. மொழிப் பிரச்சினையில் அரசு தீவிர கவனம் செலுத்தி வருகிறது. மொழிப் பிரச்சினையில் மாணவர்களுக்குப் பாதகம் ஏற்படாதவாறு தமிழக அரசும், பெரியவர்களும் கவனித்துக்கொள்வர்.

"இப்பிரச்சினையில் மாணவர்கள் பீதியடையக்கூடாது என்பதற்காகத்தான் பொதுப்பணி அமைச்சர் அவ்வாறு உறுதி அளித்தார்.

'இப்போதுகூட கல்லூரிகளில் 44 ஆயிரம் இடங்கள் ஆங்கிலப் பாட மொழிக்காக ஒதுக்கப்பட்டுள்ளன; தமிழுக்கு சுமார் 12 ஆயிரம் இடங்கள்தான் ஒதுக்கப்பட்டுள்ளன.

"யார் எதை அதிகம் விரும்புகிறார்களோ அதற்கேற்றவாறு வசதிகள் செய்யப்படுகின்றன.

"மாணவர்கள் ஆங்கிலமே பயிற்சி மொழியாக இருக்க வேண்டுமென்று கூறுவதாகச் சொல்லுவது சரியல்ல. பெரும்பாலான மாணவர்கள், 'தமிழே வேண்டும்' என்று கையெழுத்துப் போட்டு எனக்கு அனுப்பியிருக்கிறார்கள். ஏதோ ஒரு சில மாணவர்கள்தான், 'ஆங்கிலம் வேண்டும்' என்கிறார்கள்."

நிர்வாகத்தில் தொழிலாளருக்கும் பங்கு

திட்டம் பரிசீலனை

சென்னை, ஆக. 29—

"நிர்வாகத்தில் தொழிலாளர்களைப் பங்குகொள்ளச் செய்வது குறித்த திட்டம் பரிசீலனையில் இருந்துவருகிறது; பொதுத் துறையில் உள்ள தொழிற்சாலைகளில்தான் அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்த முடியும்; தனியார் துறையில் செயல்படுத்த அவர்களே முன்வர வேண்டும்"

என்று அமைச்சர் செ. மாதவன், சட்டமன்றக் கேள்வி நேரத்தில் தெரிவித்தார்.

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு

இந்த ஆண்டு கலந்து கொண்டோர் எண்ணிக்கை

சென்னை, ஆக. 29 —

தமிழகத்தில் 1968 ஏப்ரலில் நடந்த எஸ். எஸ். எல். சி. தேர்வில் கலந்துகொண்டு பரீட்சை எழுதிய உயர்நிலைப்பள்ளி மாணவர் 1,19,365 பேர்; மாணவியர் 45,837 பேர்; தனியாகப் படித்து எழுதிய மாணவர்கள் 22,923 பேர்; மாணவிகள் 8,147 பேர் ஆவர்.

நாங்குனேரிக்கு முன்சீப் கோர்ட்டு

ஏற்படுத்தும் திட்டம் இல்லை

சென்னை, ஆக. 29—

"நெல்லை மாவட்டம் — நாங்குனேரியில் ஒரு முன்சீப் கோர்ட்டு ஏற்படுத்தும் எண்ணம் அரசுக்கு இல்லை"

என்று சட்டமன்றத்தில், கழக உறுப்பினர் ஏ.எல். சுப்பிரமணியம் கேள்விக்கு அமைச்சர் செ. மாதவன் பதிலளித்தார்.

இதுபற்றி உயர் நீதிமன்றத்திடம் கேட்டதற்கு, 'அங்கு தனியாக முன்சீப் கோர்ட் ஏற்படுத்தினால் போதிய அலுவல் இருக்காது' என்று கூறிவிட்டதாக அமைச்சர் விளக்கமளித்தார்.

கோவை மின்சார விபத்து

காரணமானோருக்கு தண்டனை பாதிக்கப்பட்டோருக்கு உதவி

சென்னை, ஆக. 29—

அண்மையில் கோவையில் நடந்த மின்சார விபத்தில் 3-பேர் மாண்டனர் என்றும், 5-பேர் காயமடைந்ததாகவும், இதுபற்றி விசாரணை நடத்தி, முன்னெச்சரிக்கையுடன் இருக்கத் தவறியவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் ஒரு ஜூனியர் எஞ்சினீயர் இரண்டாம் கிரேடு சூப்பர்வைசராகப் பதவி இறக்கம் செய்யப்பட்டிருக்கிறார் என்றும், பாதிக்கப்பட்டவர்கட்கு விதிமுறைகளுக்கேற்ப நட்ட ஈடு கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

பிடிபட்ட கள்ளக் கடத்தல்காரர்கள்

1,419 பேருக்கு தண்டனை

சென்னை, ஆக. 29—

தமிழகத்திலிருந்து கேரளத்திற்கு அரிசி கடத்தியதாக 1967 ஏப்ரல் முதல் நாளிலிருந்து 1968 மார்ச் முடிய 3,415 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன; பறிமுதல் செய்யப்பட்ட அரிசியின் மதிப்பு ரூ 5½ இலட்சம்; 430 பேர்கட்குச் சிறைத் தண்டனையும், 989 பேர்கட்கு அபராதமும் விதிக்கப்பட்டது. மொத்தம் அபராதமாக வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 70,192.50. ஒரு வாரம் முதல் ஓராண்டுவரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

இத்தகவல் சட்டமன்றத்தில் தரப்பட்டது.

துணைச்சிறைச்சாலைகள்

சிறை நிர்வாகத்துறைக்குமாற்றம்

சென்னை, ஆக. 29—

"துணைச் சிறைச்சாலைகளை (சப்-ஜெயில்) வருவாய்த்துறையினரின நிர்வாகததிலிருந்து சிறை நிர்வாகத் துறையின்கீழ் மாற்றியமைக்கும் பரீட்சார்த்தத்திட்டத்தின்கீழ் இப்போது 3 துணைச் சிறைச்சாலைகள் மாற்றப்பட்டிருக்கின்றன"

என்று சட்ட அமைச்சர் செ. மாதவன், சட்டமன்றத்தில் தெரிவித்தார்.

"நாளடைவில் எல்லாத் துணைச் சிறைகளும் சிறை நிர்வாகத் துறையின்கீழ் வரும்" என்றார்.

சலகண்டபுரம் எம். ஜி. ஆர். மன்றம்

22—8—68-ல் சலகண்டபுரம் எம். ஜி. ஆர். மன்றத்தின் புதிய நிர்வாகிகள் தேர்தல், கழகச் செயலாளர் மா. நடராசன் தலைமையில் நடைபெற்றது; தேர்வு பெற்றோர் :—

தலைவர் : அ. ப. மா. குப்புசாமி; செயலாளர் : எம். ஆர். சேகர்: துணைச் செயலாளர் : வி. இராசரத்தினம்; பொருளாளர் : என். தியாகராாசன்; செயற்குழு உறுப்பினர்கள் : சங்கரலிங்கம், பெ. அய்யாவு, கே. வடிவேலு, பி. ஏ. இராதாகிருஷ்ணன், எஸ். ஆர். மாரியப்பன், எஸ். தட்சிணாமூர்த்தி எஸ். சின்னத்தம்பி.

டாக்டர் தர்மாம்பாள் நினைவுப் பேச்சுப் போட்டி

விவேகானந்தர் கல்லூரிக்கு சுழற் கேடயம்

சென்னை மாணவர் மன்றச் சார்பில் டாக்டர் தருமாம்பாள் சுழற் கேடய பேச்சுப் போட்டி, 24—8—68 அன்று மன்ற நிலையத்தில் நடைபெற்றது.

சென்னை விவேகானந்தர் கல்லூரிக்குச் சுழற் கேடயப் பரிசு கிடைத்தது.

முதற் பரிசு (ரூ. 100) விவேகானந்தர் கல்லூரி மாணவர் சிவம்; இரண்டாம் பரிசு (ரூ. 75) பச்சையப்பன் கல்லூரி மாணவர் செகன்னாதன்; மூன்றும் பரிசு (ரூ. 50) எத்திராஜ் மகளிர் கல்லூரி மாணவி எஸ். மதுரம் ஆகியோர் பெற்றனர்.

திருவாளர்கள் கி. இராமலிங்கனார் எம்.எல்.ஏ., கொடைக்கானல் எம். எம். மேத்தா எம்.எல்.ஏ., திருமதி மிராண்டா கஜேந்திரன் பி.ஏ.எல்.டி. ஆகிய மூவரும் நடுவர்களாக இருந்து சிறப்பித்தனர்.

தொடக்கத்தில் பேராசிரியர் அன்பு-கணபதி வரவேற்புரை ஆற்றினார். இறுதியில் புலவர் மி. ச. நடேசனார் நன்றி கூறினார்.

கால்நடைகளுக்கு நோய்த் தடுப்பு ஊசி

வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தில் 13—8—68 முதல் 22—8—68 வரை கால்நடைகளுக்கு வெக்கை நோய்த் தடுப்பு ஊசி போடும் பணி டாக்டர் அளந்த பத்மநாபன் (இராணிப்பேட்டை) தலைமையில் நடைபெற்றது.

பத்து நாட்களில் 15,097 கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டது.

முடிவாக 23—8—68 அன்று வந்தவாசி ஊராட்சி ஒன்றியத் தலைவர் எ. அப்பாய் தலைமையில் சிறப்புக் கூட்டம் நடைபெற்றது; அதுபோது, இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலைய கண்காணிப்பாளர் டாக்டர் சு. சண்முகம், மாவட்ட கால்நடை பராமரிப்பு அதிகாரி மேலூர் டாக்டர் சி. கே. கல்யாணசுந்தரம், வந்தவாசி ஊராட்சி ஒன்றிய ஆணையர் ஜி. இ. முத்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

திட்டக் காலத்தில் செய்த வெக்கை நோய்த் தடுப்புப் பணியைப் பாராட்டியதுடன், தொடர்ந்து செய்து வரவேண்டுமென்றும் கருத்து எடுத்துச் சொல்லப்பட்டது.

கால்நடை விரிவுத்துறை அலுவலர் கே. நந்தகோபால் நன்றி கூறினார்.

பழனிசெட்டிப்பட்டி தி. ப. தொ. சங்கம்

பழனிசெட்டிப்பட்டி திராவிடப் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத் தேர்தல் 15—8—68 அன்று நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர் வருமாறு:—

தலைவர் : கே. இராசு; துணைத் தலைவர் : சுருளிராசு; செயலாளர் : எஸ். குருசாமி; துணைச் செயலாளர் : எஸ். பாலுவனம்; பொருளாளர் : எம். கோபால்; ஆலோசனை செயற்குழு உறுப்பினர்கள் : எம். ஆர். பாலசுப்பிரமணி, கே. சாமிதுரை, பழனி, வி. ரெங்கசாமி, எஸ். அய்யப்பன், செயராம்; மற்றும் 11 பேர்.

திருச்சி மாவட்ட சலவையாளர் கூட்டுறவுச் சங்கம்

திருச்சி மாவட்ட சலவைத் தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கப் பேரவைக் கூட்டம், 11-8-68ல் நடைபெற்றது; அதுபோது கே. புருசோத்தமன் திருச்சி மாவட்ட சலவைத் தொழிலாளர் கூட்டுறவு சங்கத் தலைவராக மீண்டும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

திரு. ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., திருச்சி மாவட்ட மத்திய கூட்டுறவு பாங்கிப் பிரதிநிதியாக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அமைச்சர்களின் சொத்து கணக்கு காட்டத் தயார்!

ஆனால் மாநிலங்களின் உரிமையைப் பறிக்க இடங்கொடோம்

தமிழக அரசு நிலை-அமைச்சர் மாதவன் விளக்கம்

சென்னை, ஆக. 29

“மாநில அமைச்சர்கள் தங்கள் சொத்துக்கணக்குகளை முதலமைச்சரிடமும், முதலமைச்சர்கள் தங்களது சொத்துக் கணக்குகளைத் தலைமையமைச்சரிடம் அல்லது உள்துறை அமைச்சரிடத்திலும் அளிக்க வேண்டுமென்று மத்திய அரசிடமிருந்து வந்த யோசனையை, ‘எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது’ என்று கூறி மறுத்துவிட்டோம்!

“ ‘முதலமைச்சர்கள், தங்கள் சொத்துக் கணக்குகளைத் தலைமை அமைச்சரிடம் அளிக்க வேண்டும் என்று விதி செய்வது, அடிமை உணர்வை ஏற்படுத்துவதாகும்; மாநிலங்களின் உரிமையைப் பறிப்பதாகும்’ என்ற காரணத்தால், அந்த யோசனையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை; இதற்குப் பதில், ‘மாற்று யோசனைகளைத் தெரிவியுங்கள்’ என்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

“இங்கே நாங்களும் இதுபற்றி ஆலோசனை செய்து, ‘மற்ற அமைச்சர்கள் தங்கள் சொத்துக் கணக்குகளை முதலமைச்சரிடம் அளிக்க வேண்டும்; முதலமைச்சர் தம்முடைய சொத்துக் கணக்குகளை அமைச்சரவையிடம் அளிக்க வேண்டும்’ என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம்”

இவ்வாறு சட்டத்துறை அமைச்சர் செ. மாதவன் அவர்கள், சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்ட தனியார் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"சட்டப் பேரவை உறுப்பினர்களும், அமைச்சர்களும், தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதிலிருந்து தங்களுடைய சொத்து -- வருமானம் -- செலவு பற்றிய விவரங்களை ஆண்டுதோறும் சட்டப் பேரவைமுன் வைக்கவேண்டும்"

என்ற தீர்மானத்தை, ச. சோ. உறுப்பினர் கே. ஆர். நல்லசிவம் கொண்டுவந்தார்.

"இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் 6-திங்களில் அரசு சார்பில் சட்டம் கொண்டுவரப்படும்"

என்று அமைச்சர் உறுதியளித்தார்; இதனைத் தொடர்ந்து உறுப்பினர், தமது தீர்மானத்தை வலியுறுத்தவில்லை.

"இந்தச் சட்டத்தின் விதிகள் எவ்வாறு அமையப் பெறவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர்கள் ஒன்றுகூடி ஆலோசித்து ஒருமித்த யோசனை கூற வேண்டும்"

என்று அமைச்சர் மாதவன் கேட்டுக்கொண்டார்.

அமைச்சர் நெடுஞ்செழியன்

கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் கூறியதாவது:—

"இந்தத் தீர்மானத்தின் அடிப்படை நோக்கத்தில் ஏற்படும் நியாயமான சங்கடங்களையும், பிரச்சினைகளையும் எதிர்க் கட்சிகள் நன்கு ஆராய்ந்து யோசனைகளைத் தெரிவித்தால், அதன் அடிப்படையில் இதற்கான மசோதாவை அரசு தயாரிக்கும்."

சோலையாறு திட்டம்

திட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்பட்டதேன்?

அமைச்சர் மு. கருணாநிதி விளக்கம்

சென்னை, ஆக. 28—சட்டமன்றத்தில், சோலையாறு அணையைப் பற்றிக் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்குப் பொதுப் பணி அமைச்சர் மு. கருணாநிதி பின்வருமாறு பதில் கூறினார்:—

"1967 ஆகஸ்டு வரை இந்த அணை கட்டுவதற்காகச் சுமார் ரூ. 489 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் முழுவதையும் அமுல் நடத்துவதற்கு உத்தேசமாக ரூ. 966 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது; 1969–70-ல் இந்தத் திட்டம் நிறைவுபெறக் கூடும்.

"இந்த அணைத் திட்டத்தின்மூலம் 2.4 இலட்சம் ஏக்கர் நிலம்—குறிப்பாகப் புஞ்சை நிலம் பாசனமாகும்.

"மத்திய அரசு ஒப்புதல் அளிப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாகவே இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தாமதம் ஏற்பட்டது."

குழுக் கூட்டம்

"சென்னை 77-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 1—9—68 இரவு 8 மணிக்கு கழகப் பணிமனையில் நடைபெறும்" என்று செயலாளர் மு. சீனிவாசன் அறிவிக்கிறார்.

கண்ணதாசன் மீது உரிமைப் பிரச்சினை

ச. சோ. கட்சி உறுப்பினர் கொண்டுவந்தார்

சென்னை, ஆக. 30—

‘கடிதம்’ என்ற ஏட்டின் ஆசிரியரான கண்ணதாசன், அதனை அச்சிடும் ஐம்பு என்பவர்கள் மீது இன்று சட்டமன்றத்தில் எழுப்பப்பட்ட உரிமைப் பிரச்சினை, சட்டமன்ற உரிமைக் குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது.

ச. சோ. கட்சி உறுப்பினரான திரு. பாலசுப்பிரமணியம் இந்த உரிமைப் பிரச்சினையை எழுப்பினார்.

‘கடிதம்’ இதழில், ‘சட்டமன்றம் என்ன நீதிமன்றமா?’ என்றும்; ‘முதலமைச்சர், பொய்யிலே வாழ்கிறவர்’ என்றும்; ‘சட்டமன்றம் கூறுவதை அப்படியே ஏற்றுக்கொள்ள அது என்ன நீதி மன்றமா?’ என்றும்; ‘சட்டமன்றத்தை அவமதிக்கவும் தயங்க மாட்டேன்’ என்றும்; இன்னும் பலவாருகச் சட்டமன்றத்தை அவமதிக்கும் வகையில் எழுதப்பட்டிருப்பதாக திரு பாலசுப்பிரமணியம் கூறினார்.

இதனையொட்டி, ச. சோ. கட்சித் தலைவர் திரு. கே. ஆர். நல்லசிவம் பேசுகையில், அந்த ஏடு, அந்த ஓர் இதழில் மட்டுமல்ல -- எப்போதுமே அப்படித்தான் எழுதிவருகிறது என்றும், சட்டமன்றத்தை அவமதித்து எழுதி வரும் அந்த ஏட்டின்மீது உரிமை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கூறினார்.

அவை முதல்வரான அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களும், அந்த ஏடு எழுதியிருச்கும் கட்டுரையில், சட்டமன்றத்தை அவமதிக்கும் சொற்றொடர்களையெல்லாம் எடுத்துக் காட்டி, ‘இப்பிரச்சினையை உரிமைக் குழுவுச்கு அனுப்பிவைக்க வேண்டும்’ என்றார்.

அவைத்தலைவர் புலவர் கோவிந்தன், இப்பிரச்சினையை உரிமைக் குழுவுச்கு அனுப்பிவைப்பதாகத் தமது தீர்ப்பை அறிவித்தார்.

மருத்துவ மாணவர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளியே தெரிந்தால், அதனால் குழுவினர்மீது அந்த மாணவரைச் சார்ந்தவர்கட்கு மனக்குறை ஏற்படலாம். இதையெல்லாம் முன்னிட்டுத்தான் பட்டியல் தங்களிடமே இருக்கவேண்டும் என்று குழுவினர் விரும்புகின்றனர்.

‘நேர்முகப் பேட்டிக்கு 150 மதிப்பெண்’ என்று முன்பிருந்த அரசு, வரையறுத்திருந்தது. அதே அரசு பிறகு, ‘75 மதிப்பெண்’ என்று குறைத்தது; அதனையே நாமும் பின்பற்றி வருகிறோம்.

மாணவரைத் தேர்ந்தெடுப்பதில் அவர்கள் பெற்ற மதிப்பெண்களை மட்டும் கொண்டு தேர்ந்தெடுப்பது கூடாது. அந்தக் கொள்கையை இந்த அரசு ஒருபோதும் ஏற்காது!

உதாரணமாக, கிராமத்தில் உள்ள ஓர் ஏழை விவசாயியின் பிள்ளையும், சென்னை லயோலாக் கல்லூரியில் படித்த ஓர் ஐ. ஏ. எஸ். அதிகாரியின் பிள்ளையையும் ஒன்றுக வைத்து அவர்களின் மதிப்பெண்களைக் கணக்கிலெடுத்துப் பார்ப்பது முடியாது.

"கல்லூரிப் பரீட்சையில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களிடம் நேர்முகப் பேட்டியின் போது, அவர்கள் எதில் அதிக மதிப்பெண் பெற்றிருக்கிறார்களோ அதே பாடத்திலுள்ள கேள்வியைக் கேட்கும்போது சரியாக விடையளிப்பதில்லை" என்று குழு உறுப்பினர்கள் கூறுகிறார்கள்; எனவே, பரீட்சை எழுதிப் பெற்ற மதிப்பெண்களை மட்டும் வைத்துத் தேர்ந்தெடுப்பது கூடாது."

இரா. நெடுஞ்செழியன்

தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் கூறியதாவது:—

"மாணவர்களின்மதிப்பெண்களை மட்டும் பார்த்து முடிவு செய்ய முடியாது. எல்லா வகையிலும் நிலைமையை ஆராய்ந்துதான் முடிவுசெய்ய வேண்டும்.

உயர் நீதிமன்றத்தில், ‘மாவட்டவாரியாகக் குழு தேவையில்லை’ என்றுதான் கூறப்பட்டதே தவிர, ‘மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை தவறு’ என்று சொல்லப்படவில்லை."

சென்னையில்

அண்ணா பிறந்த நாள் விழா

மாவட்டச் செயலாளர் வேண்டுகோள்

"பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவினை சென்னையில் செப்டம்பர் 15 முதல் 22-ஆம் நாள் முடிய, கொண்டாடுவதற்குச் சென்னை மாவட்டக் கழகம் ஏற்பாடு செய்துள்ளது.

"15—9—68 அன்று கிளைக் கழக --- துணை மன்றங்களின் நாளாகக் கொண்டாடப்படல் வேண்டும்; அன்று, அலுவலகங்களைப் புதுப்பித்து --- அலங்கரிப்பதுடன், வீதிகளையும் கொடி --- தோரணங்களால் அலங்கரித்துப் புதிய கொடிகள் ஏற்றியும், இனிப்பு, பொங்கல் முதலியவை வழங்கியும், எளியவர்கட்கு உணவு அளித்தும், மாலையில் கலை நிகழ்ச்சிகள் --- பொதுக்கூட்டங்கள் --- பட்டி மன்றங்கள் --- கவியரங்குகள் ஆகியவற்றிற்கு ஏற்பாடு செய்தும் சென்னை மாநகரையே விழாக்கோலம் பூணச் செய்யவேண்டும் எனக் கிளைக் கழகங்கள், துணை மன்றங்களின் செயல்வீரர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

"16—8—68 முதல் 22—8—68 வரையிலுள்ள ஏனைய நிகழ்ச்சிகள் --- ஊர்வலம், பொதுக்கூட்டம், விளையாட்டுப் போட்டிகள் பற்றிய செய்திகள் --- அடுத்து அறிவிக்கப்படும்.

"இவ்விழா, சென்னையில் 120 வட்டங்களிலும் நடைபெற வேண்டும்.

"செயலாளர் இல்லாத வட்டங்களில் பகுதிச் செயலாளர்களால் நியமிக்கப்படும் பொறுப்பாளர்கள் இவ்விழாவிற்கான பொறுப்பேற்றுச் செயல்பட வேண்டும்"

என்று, சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன் அறிவிக்கிறார்.

சி.வி.எம். அண்ணாமலை மகள் திருமணம்

திரு. சி. வி. எம். அண்ணாமலை எம்.எல்.ஏ. அவர்களின் மகள் செல்வி: முல்லைக்கும்—ஆவடி திரு. ஏ. ஜி. தெய்வசிகாமணி அவர்களின் மகன் செல்வன்: ஆ. தெ. கோதண்டத்திற்கும் 1—9—68 காலை 9-மணிக்கு ஆவடி பாண்டியன் அரிசி ஆலை அருகில் அமைந்துள்ள திருவள்ளுவர் திடலில், பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெறும்; அமைச்சர்கள் மற்றும் கழகச் சட்டமன்ற --- நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துரை வழங்குவர்.

மாநகராட்சிப் பள்ளிக் கட்டிடத் திறப்புவிழா

சென்னை 40-வது வட்டம் சூளை ராட்லர் தெருவில் உள்ள மாநகராட்சிப் பள்ளியின் துணைக் கட்டிடத்தை, உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் திறந்து வைப்பார்; இவ்விழா, 31—8—68 மாலை 7 மணிக்கு மேயர் டாக்டர் அபிபுல்லாபேக் தலைமையிலும்—திரு. டி. கே. பொன்னுவேலு எம்.எல்.சி., முன்னிலையிலும் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-10) அச்சிட்டு வெளியிடப்படுகிறது

திருத்தணி வட்டக் கழக அலுவலகத் திறப்புவிழா

திருத்தணி வட்ட தி. மு. க. அலுவலகத் திறப்புவிழா 31–8–68 இரவு 8 மணிக்கு திருத்தணியில் நடைபெறும் திரு. சி. வி. இராசகோபால் எம்.எல்.சி. தலைமையில் அறிஞர் அண்ணா அவர்கள் திறந்துவைப்பார்கள்; திரு. இரா. நெடுஞ்செழியன், டி.கே. பொன்னுவேலு எம்.எல்.சி., கே. டி. எஸ். மணி, பரந்தாமன், புலவர். மி. ச. நடேசன், கோவிந்தசாமி, சா. கணேசன் எம்.சி., முதலியோர் சொற்பொழிவாற்றுவர்.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

செப். 1: திருச்சி; 15: போத்தனூர்; 20: முதுகுடி; 21: காலை: மதுரை, இரவு: விருதுநகர்; 22: பெருநாழி; 27: குருவாரெட்டியூர்; 29: பசுபதிகோவில்.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

31--8--68

திருத்தணி

வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: சி. வி. இராசகோபால் எம்.எல்.சி.; பேசுவோர்: அறிஞர் அண்ணா, இரா. நெடுஞ்செழியன், கே. டி. எஸ். மணி எம்.சி., டி. கே. பொன்னுவேலு எம். எல். சி., எஸ். கே. சம்பந்தம் எம்.பி., எஸ். எம். துரைராஜ் எம்.எல்.ஏ., வி. பி. அகிலன், ஏ. பரந்தாமன் பி.எஸ்சி.

சென்னை 80-வது வட்டம்

அண்ணா படிப்பகச் சார்பில் மாலை 6-30 மணிக்கு கிருஷ்ணம் பேட்டை இருசப்ப கிராமணி தெருவில்; தலைவர்: தமிழ்மணி; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., சி. சிட்டிபாபு எம்.பி., இளம்பரிதி, ம. சி கிருட்டினமூர்த்தி, மு. அரங்கநாதன் எம்.சி., கே. எஸ். பாண்டியன், எஸ். ஆனந்தன், எஸ். நைனுக்கண்ணு.

1--9--68

திருப்பூர்

28-வது வட்டார தி. மு. க. கிளை சார்பில் மாலை 7-மணிக்கு காங்கயம் பாதையில்; தலைவர்: வே. சுப்பிரமணியம்; பேசுவோர்: சே. அ. இராசமாணிக்கம் எம்.சி., இரா. முருகேசன், மு. முத்துரத்தினம், இரா. மணிமாறன், மற்றும் பலர்.

பெங்களூர்

20-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு, தலைவர்: மா. மன்னர்; பேசுவோர்: வெ. கண்ணன், மனோன்மணி, தி. திராவிடமணி, வே. இளஞ்சேரன், வி. கே. நடேசன், எம். வி. சுப்பிரமணி, ஏ. கண்ணன், சிவசங்கரன், எச். விட்டல் வேதகுமார், உலகநாதன்.

உளுந்தூர்பேட்டை

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு மணிக்கூண்டுத் திடலில்; தலைவர்: ஆர். மொட்டையன்; பேசுவோர்: இளம்பரிதி, அ. செ. குமாரசாமி பி.எஸ்சி., தி. வ. அண்ணாதாசன், டி. பஞ்சநாதன், டி. குப்புசாமி, ஏ. மாரி, எஸ். ராதாவகாப், பி. பாட்சு, க. செல்லப்பன், மற்றும் பலர்,

சென்னை 53-வது வட்டம்

மக்கள் பொதுநல மன்றச் சார்பில் மாலை 7-மணிக்கு பெரம்பூர் இராகவாச்சாரி தெருவில்; தலைவர்: கோ. பாலகிருட்டிணன்; பேசுவோர்: வழக்கறிஞர் வீ. இராசகோபாலன், கோபால்சாமி, அ. அ. ஜின்னா, இராமநாதன், ஜீவா கலைமணி, மொய்தீன் பாட்சா, அ. சு. தமிழரசன். வெ. அழகர்சாமி.

முகவரி:

பொத்தனூர் மணிமாறன் (பேச்சாளர்),
பொத்தனூர் அஞ்சல்,
சேலம் மாவட்டம்.